# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

********

முறையீட்டு மனு எண்: 239/2017/பே

ஆணை நாள்: 16–11–2018.

பேரூராட்சி செயல் அலுவலர்களின்
நலக் கூட்டமைப்பு,
12, பிரதான சாலை,
சுந்தரம் காலனி,
சேலையூர்,
சென்னை – 73. —— முறையீட்டு மனுதாரர்.

திரு.கே.மனோகரன்,
உதவி செயற்பொறியாளர் (ம)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ)
காஞ்சிபுரம் மண்டலம்,
காஞ்சிபுரம். —— எதிர் மனுதாரர்.

## ஆணை.

காஞ்சிபுரம் மாவட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களின் கூட்டமைப்பு என்ற முகவரியுடன் 23.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 24.11.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 239/2017 என எண்ணிடப்பட்டது. மேலும் 02.01.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட பேரூராட்சி ஊழியர்கள் என்ற சுய முகவரியிட்டு மற்றுமொரு புகார் மனுவும் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுக்களில் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக கூடுதல் பொறுப்பிலிருந்த, உதவி செயற்பொறியாளர் திரு.கே.மனோகரன் என்பவர் செயல் அலுவலர்களை உடன்படச் செய்து பல்வேறு ஊழல் புரிந்ததாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் எதிர் மனுதாரரிடம் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

இம்முறைமன்ற நடுவ 24.02.2018 மற்றும் 21.03.2018 நாளிட்ட அழைப்பாணைகளில் மேற்படி முறையீட்டு மனுக்கள் தொடர்பான விளக்கங்களை பதிவு செய்யும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகக் கோரி, மாமல்லபுரம், வாலாஜாபாத், அச்சிறுப்பாக்கம், திருப்போரூர், திருப்பெரும்புதூர், கருங்குழி, திருக்கழுகுன்றம், மாடம்பாக்கம், சிட்லபாக்கம், மாங்காடு, குன்றத்தூர், மற்றும் இடைக்கழிநாடு பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி கீழ்க்கண்ட செயல் அலுவலர்கள் விசாரிக்கப்பட்டனர்.

1. திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் ;
2. அச்சிறுபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் ;
3. இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் ;
4. வாலாஜாபாத் பேரூராட்சி செயல் அலுவலர் ;
5. மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ;
6. திருப்பெரும்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் ;
7. கருங்குழி பேரூராட்சி செயல் அலுவலர் ;
8. திருக்கழுகுன்றம் பேரூராட்சி செயல் அலுவலர் ;
9. மாடம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் ;
10. சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் ;
11. மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் ;
12. குன்றத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ;

மேலே குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர்கள் விசாரணையின்போது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் சரியல்ல என வாக்குமூலம் அளித்தனர்.

இம்முறைமன்ற நடுவ 19.06.2018 நாளிட்ட அழைப்பாணையில் எதிர் மனுதாரும், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளருமான திரு.கே.மனோகரனிடம், மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2018ல் ஆஜரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் திரு.கே.மனோகரன், தனது விளக்கத்தில் தான் 2015–ஆம் ஆண்டு முதல் உதவி செயற்பொறியாளராக காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணி புரிந்து வருவதாகவும், மே.2017 முதல் 29.01.2018 வரை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், தன்னைப்பற்றி அனுப்பியுள்ள புகார்களில் உண்மை இல்லை எனவும், அதில் உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அதில் எவ்விதமான அடிப்படை ஆதாரமும் இல்லை எனவும், பணிகளுக்கான மதிப்பீடுகள் தயார் செய்வது உதவிப் பொறியாளர்களின் பணி எனவும், மேற்படி மதிப்பீடுகளில் உயர்த்தி போட்டதாகவும் அவற்றில் மாறுதல் செய்து ஆதாயம் அடைந்ததாகவும் சொல்வதை மறுப்பதாகவும், மற்றும் மனுக்களில் உள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றது எனவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் விளக்கத்தினை பெறும் பொருட்டு 12.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை, பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களின் நலக் கூட்டமைப்பு, 12, பிரதான சாலை, சுந்தரம் காலனி, சேலையூர்,

சென்னை–73 என்ற முகவரியிட்டு 23.10.2018 அன்று விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

ஆனால் 23.10.2018 அன்று மேற்படி முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தினை பதிவு செய்ய எவரும் ஆஜராகவில்லை.

இந்நேர்வில், முறையீட்டு மனு, முறையீட்டு மனுவின் மீதான சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் எதிர் மனுதாரரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.கே.மனோகரன், ஆகியோரது விளக்கங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேலும் பெறப்பட்ட முறையீட்டு மனு தொடர்பாக விளக்கத்தினை பெறவேண்டி மேற்படி முறையீட்டு மனுவினை அனுப்பிய பேரூராட்சி செயல் அலுவலர்களின் கூட்டமைப்பு, சென்னை–73 என்ற முகவரிக்கு அழைப்பாணை அனுப்பி வாய்ப்பளித்தும், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக விளக்கத்தினை பதிவு செய்ய யாரும் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை.

இந்நிலையில் மேற்படி முறையீட்டு மனு மீதான பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் எதிர் மனுதாரரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ) திரு.கே. மனோகரன் ஆகியோரின் விளக்கங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டும், முறையீட்டு மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் தரப்பில் இருந்து எவரும் இப்பொருள் தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாத நிலையிலும், எதிர் மனுதாரர்களின் விளக்கங்களை ஏற்று முறையீட்டு மனு ஆதாரமற்றது எனக் கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 30/11/2018

பெறுநர்

1.பேரூராட்சி செயல் அலுவலர்களின் கூட்டமைப்பு,
12, பிரதான சாலை,
சுந்தரம் காலனி,
சேலையூர்,
சென்னை – 72.

2.உதவி செயற்பொறியாளர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

30/11/18

30/11/18